அரியலூர், செயற்பொறியாளர்(வே.பொ) (பொ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை – திரு எஸ். எட்வின் பாப்ளி, பி.இ., (சிவில்) எம்.பி.ஏ.

எண். அ/ 555/19 நாள் – .11.2019

| | |
|---|---|
| பொருள்: | நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி– 4ல் அடங்கிய பணிகள் –நேரடி போட்டித்தேர்வு 2015–16, 2016–17 மற்றும் 2017–18ம் ஆண்டில் தட்டச்சர்(பி.அ) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு – இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – திருமதி பு.க. துர்காதேவி, தட்டச்சர் பணி வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக. |
| பார்வை: | 1) சென்னை – 3, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண். 1012/PSD – G2/19 நாள்: 20/02/2019, 27/02/19.<br>2) சென்னை –5, வேளாண்மை இயக்குநர், அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர்(பமே) அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி5/139388/2018, நாள்: 05/03/2019.<br>3) தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். அப2/8448/2019 நாள்: 08/03/2019.<br>4) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். ஆ/555/2019 நாள்: 15/03/2019.<br>5) தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னைஅவர்களின் கடித எண். அப2/8448/19 நாள்: 14/08/2019.<br>6) உதவி செயற்பொறியாளர்(வே.பொ), அரியலூர் அவர்களின் கடித எண். அ/402/2019 நாள்: 04/11/2019. |

------

**ஆணை–**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 2015–16, 2016–17 மற்றும் 2017–18ம் ஆண்டு நேரடி போட்டித் தேர்வின் மூலம் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு பார்வை(1)ல் காணும் செயல்முறை ஆணையின்படி வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு தட்டச்சர் –ஆக தற்காலிக அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் பொருட்டு இக்கோட்டத்திற்கு ஒதுக்கிடு செய்து ஆணை வழங்கப்பட்ட திருமதி பு.க. துர்காதேவி, அவர்களுக்கு பார்வை (2)ல் காணும் வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் வழங்கிய அறிவுரையின்படி பணி நியமன அதிகாரியானவர் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் பார்வை (6) ல் காணும் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி மேற்கண்ட அடிப்படையில் உதவி செயற்பொறியாளர் (வே.பொ), அரியலூர் அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரியும் திருமதி பு.க. துர்காதேவி , அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 15/03/19 பிற்பகல் முதல் இவரது பணியினை வரன்முறை செய்து இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

True Copy / Attested

செயற் பொறியாளர்
(வேளாண்மைப் பொறியியல்)
சிவகங்கை.

/2

* The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the Post included in-combined Civil Services Examination – IV for the year 2015-16, 2016-17, and 2017-18 recruitment

1. மாவட்ட அலுவலக நடைமுறை நூல்
2. வேளாண்மைப் பொறியியல் துறை, பொதுப்பணிதுறை தேர்வு
3. பொதுப்பணித் துறை மற்றும் சார்நிலை கணக்கு அலுவலர்கள் கணக்குத் தேர்வு பாகம் – I

மேற்குறிப்பிட்ட தேர்வுகள் உரிய காலத்தில் இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெறவேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெற்ற பின்னரே 2–வது மற்றும் அடுத்தடுத்த ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். மேற்படி பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுக்குள் தகுதிக்காண் பருவம் முடித்திட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

5/11/19

செயற்பொறியாளர்(வே.பொ)(பொ),
அரியலூர்.

5/11/19

பெறுநர்:
திருமதி பு.க. துர்காதேவி,
தட்டச்சர்,
உரிய வழிமுறையாக.

மூலம் மற்றும் நகல்: உதவி செயற்பொறியாளர் (வே.பொ), அரியலூர்.

திருமதி பு.க. துர்காதேவி, தட்டச்சர் (பிஅ) அவர்களின் பணிப்பதிவேடு 1–தொகுதி மற்றும் பதிவுறுத்தாள் – 1 இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதல் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு இவ்வலுவலகத்திற்கு விவரம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்: தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: கண்காணிப்புப் பொறியாளர்(வே.பொ), திருச்சி அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்: பணிப்பதிவேடு
நகல்: இருப்பு கோப்பு

ந.க.எண். அ/402/2019. நாள். 19-12-2019

நகல் அனுப்பப்படுகிறது.

19/12/19
உதவி செயற் பொறியாளர்
(வே. பொ) அரியலூர்.
19/12/19

பெறுநர்.
திருமதி. பு.க. துர்காதேவி,
தட்டச்சர்.
இவ்வலுவலகம்.

True copy / Attested.

செயற் பொறியாளர்
(வேளாண்மைப் பொறியியல்)
சிவகங்கை.

2/2